கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்

அ.வ.எண்.**11/2020**

நாள் : 24.03.2025

பி.வா.சா.1 - சாந்தி

**15,16** ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை

வாதி தரப்பு குறுக்கு விசாரணை **:**

நான் தாக்கல் செய்த நிருபணவாக்குமூலத்திற்கு நான்தான் விவரம் சொன்னேன். வாதி தரப்பில் தாக்கல் செய்த கொடிவழி ஜாபிதாவில் குறிப்பிட்ட உறவுமுறையை நான் ஒப்புக்கொள்கிறேன். 2, 3 பிரதிவாதிகள் எனது மகன் மற்றும் மகள். 2, 3 பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக உள்ளார் என்றால், சரிதான். வழக்கு சொத்தில் 1,2,3,4,6 மற்றும் 8 லக்க சொத்துக்கள் சுப்பிரமணியதேவரின் பூர்விக சொத்துக்கள் என்றால், உயிலில் என்ன உள்ளதோ அதுபடிதான் எனக்கு தெரியும். உயிலில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் சுப்பிரமணியதேவரின் பூர்விக சொத்துக்களா, சுய சம்பாத்திய சொத்துக்களா என்றால், தெரியாது. நான் M.A., B.Ed., படித்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 உயில் பற்றி எவ்வாறு தெரியும் என்றால், எனது மாமியார் இறந்த பின்பு எனது நாத்தனார் ராஜம்மாள் சொல்லி தெரியும். உயிலில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் படித்து பார்த்தேன் உண்மைதான். பி.வா.சா.ஆ.1 உயிலில் சுப்பிரமணியதேவருக்கு பூர்விக சொத்துக்களும், சுய சம்பாத்ய சொத்துக்களும் இருக்கின்றது என்று சொல்லப்பட்டுள்ளது. நான் தற்போது அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். 2004 ம் வருடத்திலிருந்து அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். சுப்பிரமணியதேவர் சுமார் 7 தலைமுறையாக விருதுநகரில் குடியிருந்தார் என்றால், சரிதான். தபசில் 11 வது இலக்க சொத்து முருகேசன் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றால், தெரியாது. பி.வா.சா.ஆ.1 உயில் 2003 ம் வருடம் எனது மாமனார் இறந்த பின்பு நடைமுறைக்கு வந்தது. அவரது இறந்த பின்பு உயில் நடைமுறைக்கு வரவில்லை என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.1 உயில் சுப்பிரமணியதேவர் சில நிபந்தனைகளுடன் எழுதினார் என்றால், சரிதான். நான் தாக்கல் செய்த நிருபணவாக்குமூலத்தில் நிபந்தனைகளை நிறைவேற்றியுள்ளதாக சொல்லியுள்ளேன். எனது மகனுக்கு முருகேசன் என்றும், எனது மகளுக்கு சுப்புலட்சுமி என்றும் பெயர் வைக்க வேண்டும் என்று உயில்படியான

நிபந்தனைகளில் உள்ளது என்றால், சரிதான். அதுபடி நான் எனது மகன் மற்றும் மகளுக்கு பெயர் சூட்டவில்லை. எனது மகனுக்கு சுப்பிரமணியதேவரின் மகளின் மகள் தங்கநிலாவை திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று நிபந்தனையும் சொல்லப்பட்டுள்ளது அதேபோல் எனது மகளுக்கு சுப்பிரமணியதேவரின் மகளின் மகன் செண்பகராஜை திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று நிபந்தனையும் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதுபடி திருமணம் நடக்கவில்லை. எனது மகளை செண்பகராஜனுக்கு பெண் கேட்கவில்லை. எனது மகளுக்கு வள்ளிமயில் மகன் மணிகண்டனுக்கு நிச்சயம் செய்து வைத்தோம். ஆனால் மணிகன்டன் திருமணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். நான் 1ம் வாதியிடம் செண்பகராஜனுக்கு திருமணம் செய்துவைக்குமாறு கேட்டேன். அவர்கள் முடியாது என்று சொல்லிவிட்டார். மணிகண்டனுடன் எனது மகளுக்கு நிச்சயம் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்திருந்தால் நான் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால், சரியல்ல. 3 ம் பிரதிவாதி வழக்கை நடத்தினால் மணிகண்டனுடன் நிச்சயம் நடக்கவில்லை என்ற விவரம் தெரிந்துவிடும் என்றால், சரியல்ல. எனது மகனுக்கு தங்கநிலாவை பெண் கேட்டு போகவில்லை என்றால், சரியல்ல. தங்கநிலாவிற்கு வேறு திருமணம் நடந்த பின்புதான் எனது மகனின் திருமணம் நடந்தது. எனது மகன் வேறு பெண்ணை காதல் திருமணம் செய்தார் என்றும், அதனால் தங்கநிலாவை திருமணம் செய்யவில்லை என்றும் சொன்னால், சரியல்ல. அதற்கு பின்பு எனது மகன் காதல் திருமணம் செய்தார். ஏற்கனவே அவர் காதல் செய்து கொண்டிருந்ததால்தான் தங்கநிலாவை வேண்டாம் என்று சொன்னார் என்றால், சரியல்ல. முருகேசன் திருமணம் செய்து குழந்தைகளுடன் வாழ்ந்தால் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் முழுவதும் அவருக்கு உரிமையுண்டு என்று உயிலில் சொல்லப்பட்டுள்ளது. முருகேசனுக்கு திருமணம் நடைபெறவில்லை. அவரை நான்தான் பார்த்தேன். நான் முருகேசனை பார்க்கவேண்டும் என்று உயிலில் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. முருகேசன் 2019 டிசம்பர் மாதம் இறந்ததாக நிருபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை. தேதி ஞாபகம் இல்லை. எனது மகனும், மகளும் எனக்கு வழக்கு தபசில் 1வது சொத்தைப் பொறுத்து எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் ஆவணத்தின் கணினிநகல்தான் என்னிடம் காண்பிக்கப்படுவது வா**.**சா**.**ஆ**.1**. அந்த ஆவணத்தில் எனது மகனும், மகளும் உயில்படி சொத்து அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லவில்லை. பி.வா.சா.ஆ.1 உயில் நடைமுறைக்கு வராததால்தான் வா.சா.ஆ.1ல் உயில்படி

பாத்தியப்பட்டது என்று சொல்லவில்லை என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்த உயிலில் சுப்பிரமணியதேவர் இறந்து அவரது மனைவி லட்சுமியம்மாள் ஆயுளுக்குபின் உயில் ஊர்ஜிதத்திற்கு வரவேண்டியது என்று சொல்லப்பட்டுள்ளது. நான் நிருபணவாக்குமூலத்தில் சுப்பிரமணியதேவர் இறந்தவுடன் உயில் ஊர்ஜிதத்திற்கு வந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால், நான் அதை சரியாக கவனிக்கவில்லை. எங்கள் குடும்பத்தில் இறந்தவர்களை ஒரு சிலரை எரிப்பார்கள், ஒரு சிலரை புதைப்பார்கள். எனது மைத்துனர் முருகேசன் இறந்தவுடன் எரித்தார்கள். முருகேசன் இறந்து சடங்குகளை மூன்றாம் நாள் செய்தோம். வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் 04.12.2019 ம் தேதி எழுதப்பட்டது என்றால், சரிதான். முருகேசன் இறந்து மூன்று நாட்களுக்குள் அந்த ஆவணம் எழுதப்பட்டது என்றால், முருகேசன் இறந்து அடுத்த வருடம் டிசம்பர் மாதம் சாமி கும்புடும்போதுதான் வா.சா.ஆ.1 எழுதுனோம். 1 வது லக்க சொத்தில் 18 சென்ட் முருகேசன் பெயருக்கு பட்டா மாறுதல் ஆனதுக்கு நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். இன்னொரு 18 சென்ட் இராமநாதன் பெயரில் பட்டா மாறுதல் ஏற்பட்டதா என்றால், அவர் 2012 ம் வருடமே இறந்துவிட்டார். அதற்குபின்புதான் எனது அத்தை இறந்தார். 18 சென்ட் எனது பெயருக்கும், எனது மகன் மற்றும் மகள் பெயருக்கும் பட்டா மாற்றப்பட்டது. முருகேசன் பெயரிலிருந்து 18 சென்ட் விஜயராஜன் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய விஜயராஜன் மனு கொடுத்தார். உயில்படி யாரும் பங்கு பெறவில்லை என்றும், 1 வது அயிட்ட சொத்து சுப்பிரமணியதேவர் பெயரிலிருந்ததை நான்தான் மனுகொடுத்து முருகேசனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை விஜயராஜன் பெயருக்கும், இராமநாதனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனது பெயருக்கும், எனது மகன் மற்றும் மகள் பெயருக்கும் மாற்றினேன் என்றால், சரிதான். அந்த பட்டா மாறுதல் உத்தரவு நகல் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் அது வா**.**சா**.**ஆ**.2**. முருகேசனின் இறப்பு சான்றிதழ் நகல்தான் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் அது வா**.**சா**.**ஆ**.3.** வா.சா.ஆ.3 ன்படி முருகேசன் இறந்த தேதி 14.12.2018 என்றால், சரிதான். முருகேசன் உயிருடன் இருக்கும்போது 11.12.2018 ம் தேதி அன்று நான் முருகேசனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் பட்டா மாறுதல் செய்யும்படி மனு கொடுத்தேன் என்றால், அதற்கு மட்டும் பண்ணவில்லை. எனது மானமனார் மற்றும் மாமியார் இறந்தபின்பு கூட்டுபட்டாவாக இருந்தததை அவர் அவர் பெயருக்கு பட்டா மாற்றுவதற்கு நான் மனு கொடுத்தேன். கூட்டுப்பட்டா என்பது எனது மாமனார், மாமியார், மச்சான் பெயரில் இருந்தது. அவ்வாறு கூட்டுப்பட்டா இல்லை என்றும்

சுப்பிரமணியதேவர் பெயரில்தான் பட்டா இருந்தது என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.1 உயிலின் அசல் 1ம் வாதியிடம் உள்ளது. பி.வா.சா.ஆ.1 உயிலில் அசல் ஒன்றும், மூன்று பிரதிகள் என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால், தெரியாது. பி.வா.சா.ஆ.1 உயிலில் மூன்று பிரதிகள் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. சுப்பிரமணியதேவருக்கு உயில் எழுதி பின்பு இரத்து செய்யும் பழக்கம் உள்ளது என்றால், சரியல்ல. அசல் உயிலோ சுப்பிரமணியதேவர் கிழித்திருக்க வாய்ப்புள்ளதா என்றால், தெரியாது. சுப்பிரமணியதேவர் எழுதிய உயில் இரத்து செய்துவிட்டதனால்தான் அசல் யாரிடமும் இல்லை என்றால், சரியல்ல. உயிலின் பதிவு எண் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், உயில் எழுதியதாக முதல் வாதி எனக்கு சொல்லி தெரியும். அதனால் எனது மாமியார் இறந்த பின்பு சுப்பிரமணியதேவர் உயில் எழுதியிருந்தால் அதன் நகல் வேண்டும் என்று நகல் கொடுத்தேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் லட்சுமியம்மாளின் இறப்பு தேதி டிசம்பர் 2018 என்று சொல்லியுள்ளேன். லட்சுமியம்மாள் 10.12.2017 ம் தேதி இறந்தார் என்றால், சரிதான். நான் வேண்டுமென்ற நிருபணவாக்குமூலத்தில் லட்சுமியம்மாளின் இறப்பு தேதி டிசம்பர் 2018 என்று தவறாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. உயில் நகல் எந்த தேதியில் வாங்கினேன் என்றால், சரியாக ஞாபகம் இல்லை. பொதுவாக பதிவாளர் அலுவலகத்தில் நகல் வாங்கினால் முதல் பக்கத்தில் முத்திரைத்தாள் வைத்து அதில் மனுதாரர் பெயர் குறிப்பிட்டு நகல் கொடுப்பார்கள் என்றால், சரியல்ல. யாரோ வாங்கியோ சான்றிட்ட நகலை நான் வாங்கியதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் முதல் பக்கம் இல்லை என்றால், சரியல்ல. பதிவாளர் அலுவலகத்திலிருந்து என்ன கொடுத்தார்களோ அதை தாக்கல் செய்துள்ளேன். பதிவாளரை விசாரித்தால் யார் நகல் மனு கொடுத்தார் என்று தெரியும். வழக்கு தபசில் 2 வது இன சொத்து சுப்பிரமணியதேவரின் பூர்விக சொத்து என்றால், சரிதான். வழக்கு தபசில் 3 வது இன சொத்தும் சுப்பிரமணியதேவரின் பூர்விக சொத்து என்றால், சரிதான். உயில்படி 3 வது இன சொத்து யாருக்கும் போகவில்லை என்றும், சுப்பிரமணியதேவரின் பெயரில்தான் பட்டா உள்ளது என்றால், சரியல்ல. வழக்கு தபசில் 4 வது இன சொத்து பூர்விக சொத்து என்றுதான் உயிலில் உள்ளது என்றால், உயிலில் இருந்தால் சரிதான். தபசில் 8 வது லக்க சொத்தில் உள்ள வீடுகள் பூர்விக சொத்து என்றால், சரிதான். அதில் கதவு எண் 65, 65/1 ஆகிய வீடுகள் முருகேசனுக்கு என்று உயிலில் உள்ளது என்றால், சரிதான். கதவு எண் 65, 65/1 ஆகிய வீடுகள் தற்போது எனது மகனுக்கு

பாத்தியப்பட்டது. கதவு எண் 65/1 வீட்டிற்கு தற்போது எனது பெயரிலும், எனது மகன் மற்றும் மகள் பெயரிலும் வீட்டுவரி ரசீது உள்ளது. 65/1 வீடு எனது கணவரின் பங்கிற்கு உள்ளது. உயிலில் 65/2 எனது கணவருக்கு பாத்தியம் என்று உள்ளது என்றால், சரியல்ல. வழக்கு தபசில் 9 வது இன சொத்து சுப்பிரமணியதேவரும், லட்சுமியம்மாளும் கூட்டாக கிரையம் வாங்கிய சொத்து என்றால், சரிதான். அதன் அசல் ஆவணம் என்னிடம் உள்ளது ( சாட்சி தற்போது இல்லை என்று சொல்கிறார்). அந்த 8 வீடுகளும் தற்போது எனது பராமரிப்பில் உள்ளது. அந்த 8 வீடுகளை பங்கு பிரிக்க எனக்கு சம்மதம்தான். அந்த விடுகளுக்கு நான் செலவு செய்ததாக பி.வா.சா.ஆ.14 தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.14ன் படி நான்கு லட்சம் செலவு செய்ததாக உள்ளது என்றால், அதற்கு மேல் செலவு செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.14 கதவு எண் 30 க்கு செலவு செய்ததாக கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.14ன் மொத்தம் தொகை ரூபாய் ஒருலட்சம்தான் என்றால், சரியல்ல. அந்த 8 வீடுகளில் ஒரு சில வீடுகளை வாடகைக்கும், ஒரு சில வீடுகளை ஒத்திக்கும் விட்டுள்ளேன். அந்த வருமானத்தை வாதிகளுக்கோ, இதர பிரதிவாதிகளுக்கோ நான் கொடுக்கவில்லை என்றால், பங்கு கொடுக்கவில்லை. ஞானகுருவின் கணவருக்கு நான் செலவு செய்துள்ளேன். தபசில் 10 வது இலக்க சொத்து லட்சுமியம்மாள் பெயரில் கிரையம் வாங்கிய சொத்து. அதன் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்று தெரியாது. அந்த சொத்தில் வாதிக்கு பங்கு பிரிப்பதில் சம்மதம்தான். வழக்கு தபசில் 11 வது இலக்க சொத்து சுப்பிரமணியதேவரின் சேமிப்பில் இருந்தும், வருமானத்திலிருந்தும் வாங்கியதாக நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். அந்த கிரைய ஆவணம் என்னிடம் இல்லை. அந்த கிரைய ஆவணம் முருகேசன் பெயரில் வாங்கியதாக உயிலில் உள்ளது. அந்த சொத்து முருகேசனின் சுயவருமானத்தில் இருந்து கிரையம் பெற்ற சொத்து என்றால், சரியல்ல. முருகேசன் பத்திரஎழுத்தராக பணிபுரிந்தார் என்றால், சரியல்ல. எனக்கு திருமணம் நடந்தபோது 1ம் வாதிக்கு திருமணம் ஆகவில்லை. எனது திருமண தேதி மே மாதம் 28 வருடம் ஞாபகம் இல்லை. எனக்கு திருமணம் ஆகி எத்தனை வருடம் கழித்து ராஜம்மாளுக்கு திருமணம் ஆனது என்று ஞாபகம் இல்லை 1994 என்று நினைக்கிறேன். ராஜம்மாளின் திருமணப்பத்திரிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் என்றால், என்னை திருமணத்திற்கு அழைக்கவில்லை. தபசில் 1 முதல் 4, 6 மற்றும் 8 சொத்துக்கள் சுப்பிரமணியதேவரின் பூர்விக சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்கள் குறித்து உயில் எழுதி வைக்க அவருக்கு

உரிமையில்லை என்றும் சொன்னால், சரியல்ல. உயில் சாட்சிகள் மூன்று பேர் மற்றும் ஆவணம் தயாரித்த நபர் ஆகியோரின் விவரங்கள் உயிலின் நகல் எடுத்துபார்த்த பின்புதான் எனக்கு தெரியும். ராஜம்மாள் திருமணம் ஆன காலத்திலிருந்து எனக்கும், அவருக்கும் சண்டை சச்சரவுகள் இருந்தது என்றால், நான் யாரிடமும் சண்டை போடவில்லை. ராஜம்மாள் என்னிடம் சண்டை போடுவாரா என்றால், எல்லோரும் சேர்ந்துதான் பத்திவிடுவார். உயிலில் சாட்சி கையொப்பம் செய்தவர்களை சாட்சியாக விசாரிக்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அவர்கள் இறந்துவிட்டார்கள். அவர்கள் இறந்ததற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. உயிலின் அசல் யாரிடம் இருக்கவேண்டும் என்றும், பிரதிகள் யாரிடம் இருக்க வேண்டும் என்றும் சுப்பிரமணியதேவர் குறிப்பிட்டு எழுதவில்லை. பி.வா.சா.ஆ.1 ல் சுப்பிரமணியதேவர் ஏற்கனவே எழுதிய உயிலை இரத்து செய்ததாக சொல்லியுள்ளார் என்றால், சரிதான். சுப்பிரமணியதேவர் உயில் எழுதிய 2000 வருட காலகட்டத்தில் அவர் எழுதிய வேறு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. 8 வது இன சொத்தில் உள்ள மூன்று வீடுகளை நான் வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால், அது இரண்டு வீடுதான். அதன் வாடகை நான் யாருக்கும் கொடுக்கவில்லை. வாதி கோரியபடி வழக்கு சொத்துக்களில் பாகம் கிடைக்கக்கூடியது என்றால், சரியல்ல. இவ்வழகக்கு தாக்கல் செய்யும் முன்பு நான் உயிலை நிருபணம் செய்ய எந்த வழக்கும் நான் தாக்கல் செய்யவில்லை. சட்டப்படி செல்லாத உயிலை வைத்து எனது பெயரிலும், எனது பிள்ளைகள் பெயரிலும் மோசடியாக பட்டா மாறுதல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. உயிலின் அசல் வாதியிடம் உள்ளதாக மோசடியாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. உயில்படி அதிகமாக சொத்துக்கள் ராஜம்மாளுக்கு உள்ளதாலும், வாதியை நல்லவிதமாக சொல்லியுள்ளதாலும் உயிலின் அசல் அவரிடம் இருந்தால் அவர் தாக்கல் செய்திருப்பார் என்றால், சரியல்ல. சுப்பிரமணியதேவரின் கடைசி உயிலை அழித்திருக்க வாய்ப்புள்ளது என்றால், சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.